பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 05 செவ்வாய்க்கிழமை 21.09.2021 கதிர் 184

## மேலும் 1,047 பேர் பூரண குணமடைவு

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் ஆயிரத்து 47 பேர் குணமடைந்து இன்று வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இதையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 லட்சத்து 34 ஆயிரத்து 140 ஆக அதிகரித்துள்ளது.

2

# வவுனியாவில் ஒரே நாளில் 6 பேர் கொரோனாவால் சாவு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மேலும் 35 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதுடன், 21 வயது பெண் உட்பட 6 பேர் மரணமடைந்துள்ளனர் எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில இன்று காலை வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் மேலும் 35 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்

2

### கொரோனாத் தொற்றால்

## மஸ்தான் எம்.பியின் இணைப்பாளர் சாவு



(வவுனியா நிருபர்)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தானின் இணைப்பாளர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியைச் சேர்ந்த சலாஹீதீன் ஹாஜி (சாபு) என்பவரே மரணமடைந்தவராவார்.

2



# அரச கூட்டுக்குள் மீண்டும் மோதல்

## கோட்டாவின் வருகைக்காகப் பங்காளிகள் காத்திருப்பு

கெரவலபிட்டிய மின் உற்பத்தி நிலைய விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் பேச்சு நடத்துவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் 11 கட்சிகள் தீர்மானித்துள்ளன.

கெரவலபிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவதற்கு நிதி அமைச்சால்

2

# கைதிகளுக்கு கொலை அச்சுறுத்தல்; நாளை சபையில் விசேட பிரேரணை

## கஜேந்திரகுமார் எம்.பி. முன்வைப்பு

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தல் தொடர்பில் நாளை சபையில் விசேட பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சிறைச்சாலை மற்றும் கைதிகள் புனர்வாழ்வு தொடர்பான இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்த லொஹான் ரத்வத்த, தனது பதவி நிலை அதிகாரத்தைப் பயன்படுத்தி கடந்த 12ஆம் திகதி மாலை 6 மணியளவில் நிறை போதைக்குள்ளான நிலையில் அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை தனக்கு முன் கொண்டு வந்து நிறுத்துமாறு பணித்திருந்தார்.

அதற்கமைய அவருக்கு முன் முழந்தாழிட்டு நிறுத்தப்



பட்ட கைதிகளது தலையில் அவர் துப்பாக்கியை வைத்து கொலை மிரட்டல் விடுத்தி

2



## குவைத் பிரதமருடன் கோட்டாபய சந்திப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் குவைத் நாட்டின் பிரதமர் ஷெய்க் சபா அல் - ஹமாட் அல் - சபாவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு நியூயோர்க்கில் நடைபெற்றது.

2

## 73,000 வாடிக்கையாளர்களுக்கு நீர் விநியோகம் இடைநிறுத்தம்

இலங்கையில் ஆறு மாதங்களுக்கு மேலாக நீர் கட்டணத்தைச் செலுத்தாத சுமார் 73 ஆயிரம் வாடிக்கையாளர்களுக்கான நீர் விநியோகத்தை இடைநிறுத்த தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தயாராகி வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2



## 76 ஆயிரம் பேர் இதுவரை கைது

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 509 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 25 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் இன்று விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2



## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி - அக்கராயன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கராயன் குளம் வைத்தியசாலை வீதியில், மின்சாரம் தாக்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

27 வயதான பேரம்பலநாதன் கேசவன் என்ற

2

## 73,000......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சின் தீர்மானத்துக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நுகர்வோரிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகை 145 கோடி ரூபாவாகும். எனினும், நுகர்வோர் தமது பட்டியல் கொடுப்பனவைச் செலுத்தாததால் சபை800கோடிரூபாவைஇழந்துள்ளது.

6 மாதங்களுக்கு மேலாக நீர் கட்டணங்களைச் செலுத்தாத வாடிக்கையாளர்களுக்கு குறுஞ்செய்தி வழியாக தகவல் அனுப்பப்பட்டுள்ளது. குறுஞ் செய்தி அனுப்பப்பட்டதன் பின் 100 வாடிக்கையாளர்கள் கட்டணத்தைச் செலுத்தியுள்ளனர் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, சுற்றுலாத்துறையின் வீழ்ச்சியால், நாடு முழுவதும் உள்ள பல ஹோட்டல்களும் நீர் கட்டணத்தைச் செலுத்தவில்லை.

நீர்வழங்கல்வடிகாலமைப்புசபைக்கு மாதந்தோறும் 20 கோடி ரூபா செலவு ஏற்படுவதால் வாடிக்கையாளர்கள் தமது கட்டணங்களை விரைவாகச் செலுத்துமாறு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

## கைதிகளுக்கு.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசர பிரச்சினை குறித்து நாடாளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டம் 27 (2) இன் கீழ் முன்வைக்கப்படவுள்ள பிரேரணை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் சபாநாயகரிடம் இன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த பிரேரணை நாளை சபையில் முன்வைக்கப்படும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## குவைத்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு நாடுகளுக்கும் இடையிலான ஐம்பது வருடகால நெருங்கிய தொடர்புகள், நட்புறவுடன் கூடிய இராஜதந்திர உறவுகள் பற்றி நினைவூட்டிக்கொண்ட இரு தலைவர்களும், இந்தத் தொடர்புகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இலங்கையர்கள் பலர் குவைத்தில் பணியாற்றுகின்றனர் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பயிற்சி பெற்ற தொழிற்படையினருக்கு மேலும் பல வாய்ப்புகளைத் திறந்து விடுமாறு கோரிக்கை விடுத்தார்.

கொரோனாத் தொற்றுப் பரவல் கட்டுப்பாடு மற்றும் நாட்டுக்குள் முன்னெடுக்கப்பட்டு வரும் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டங்கள் தொடர்பில் எடுத்துரைத்த ஜனாதிபதி, தொற்றுப் பரவல்நீங்கிஉலகம்திறக்கப்படும்போது, இரு தரப்புகளுக்கிடையிலான தொடர்புகளைப் பலப்படுத்திக்கொள்ள உள்ள வாய்ப்புகள் குறித்து எடுத்துரைத்தார்.

துறைமுக நகரம், சூரிய மற்றும் காற்றாலை மின்னுற்பத்தி மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு போன்ற துறைகளில் குவைத் அரசால் மேற்கொள்ளக்கூடிய முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பிலும் குவைத் பிரதமருக்கு ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

உணவுப் பாதுகாப்பு, கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் சைபர் பாதுகாப்பு தொடர்பிலும் இரு தலைவர்களும் கலந்துரையாடினர்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

மற்றொரு செய்தி 8ஆம் பக்கத்தில்

## அரச கூட்டுக்குள்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு பங்காளிக் கட்சிகள் இன்னும் பச்சைக் கொடி காட்டவில்லை. எனினும், இதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுவிட்டதுஎனத்தகவல்வெளியாகியுள்ளது.

இந்நிலையில், ஆளுங்கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, எமது மக்கள் சக்தி, லங்கா சமசமாஜக்கட்சி ஆகியன இலங்கை கம்யூனிஸ் கட்சி அலுவலகத்தில் நேற்று முக்கியத்துவமிக்க சந்திப்பை நடத்தியிருந்தன.

அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ விதாரண, அத்துரலிய ரத்தன தேரர், இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர உள்ளிட்டவர்கள் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பின்போது மின் உற்பத்தி நிலைய விவகாரம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பிய பின்னர் அவரைச் சந்தித்து இதுசம்பந்தமாகப்பேச்சுநடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மற்றும் இதர கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடுவதற்கும் இதன்போது முடிவெடுக்கப்பட்டுள்ளது.

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தைஅமெரிக்கநிறுவனத்திடம் வழங்குவதற்கு பங்காளிக் கட்சிகள் எதிர்ப்பா என்பது தொடர்பில் அக்கட்சிகளின் தலைவர்கள் பகிரங்கமாக அறிவிக்கவில்லை. எமது நடவடிக்கை என்னவென்பதைப் பொறுத்திருந்து பாருங்கள் என்று சந்திப்பில் கலந்துகொண்டவர்கள் குறிப்பிட்டனர்.

அதுமட்டுமல்ல கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்துக்கு நடந்த கதியே இதற்கு நடைபெறும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார்.

## மேலும்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் இதுவரையில் 5 லட்சத்து 6 ஆயிரத்து 9 பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றால்உயிரிழந்தவர்களின்எண்ணிக்கை 12 ஆயிரத்து 218 ஆக பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்று காரணமாக வவுனியாவில் நேற்று 6 பேர் மரணமடைந்துள்ளனர். அட்டமஸ்கட பகுதியில் பெண் ஒருவரும் (வயது 21), தேக்கவத்தை பகுதியில் நகர சபை உறுப்பினரான பெண் ஒருவரும் (வயது 55), பம்பைமடு காப்பகம் ஒன்றில் ஆண் ஒருவரும் (வயது 78), குருமன்காடு பகுதியில் பெண் ஒருவரும் (வயது 75), பட்டாணிச்சூர் பகுதியில் ஆண் ஒருவரும் (வயது 65), ஆர்.டி.எஸ். விடுதியில் ஆண் ஒருவரும் (வயது 92) என 6 பேர் மரணமடைந்துள்ளனர்.

மரணமடைந்தவர்களின் சடலங்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (100)

## மின்சாரம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

சிறிய பெட்டிக்கடை ஒன்று அமைப்பதற்காக வெல்டிங் வேலையில் அவர் ஈடுபட்டிருந்தவேளை மின்சாரம் தாக்கிய நிலையில் அக்கராயன்குளம் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது அவர் உயிரிழந்துள்ளார்.

சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அக்கராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மஸ்தான்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

இவர், பட்டக்காடு மஸ்ஜிதுல் இலாஹிய்யா ஜீம்ஆ பள்ளிவாசல் தலைவரும், பட்டாணிச்சூர் மன்பஉல் உலூம் அரபுக் கல்லூரியின் உபதலைவரும், வவுனியா பள்ளிவாசல் குழுவின் பொருளாளரும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தானின் இணைப்பாளரும் ஆவார்.

குறித்த நபரின் சடலத்தை அடக்கம் செய்வதற்கான சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி ஓட்டமாவடிக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (100)

## 76 ஆயிரம்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 76 ஆயிரத்து 145ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்குள்உள்நுழையும்மற்றும்வெளியேறும் 13 பிரதேசங்களில் நேற்று தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி 190 வாகனங்களில் வந்த 357 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
**தொலைபேசி இலக்கம்-**
**076 443 8622**
**மின்னஞ்சல் -**
**kalaikkathiradvt@gmail.com**



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இது சோதனை காலம்

மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் அதிக மேம்பாட்டை இலங்கையின் கோட்டாபய ராஜபக்ஷ அரசிடம் உலகம் எதிர்பார்த்து நிற்கின்றது. ஆனால் இலங்கை அரசோ 'வெறும் கையால் முழம் போடுவது போல' செயலில் அல்லாமல் வெறும் வாய்ப்பந்தல் போட்டுக் கொண்டிருக்கின்றது. இம்மாதம் இரண்டாம், மூன்றாம் வாரங்களில் ஜெனிவாவில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வுகளின் போது, மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான வாய்மூல உரையில் இலங்கைக்கு எதிராக சரமாரியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அக்குற்றச்சாட்டுகளை அடியோடு மறுத்தார். அச்சமயம் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு, காணாமல் போனோருக்கான அலுவலகம், இழப்பீடுகளை வழங்குவதற்கான அலுவலகம் எனப் பல கட்டமைப்புகள் காத்திரமாக இயங்குகின்றன என்று பீலா விட்டார் அவர். ஆனால், அவையெல்லாம் – அவர் தமது அரசினுடையவை என்று உரிமை கோரிய விடயங்கள் எல்லாம் – முன்னைய நல்லாட்சி அரசு ஆரம்பித்த செயற்பாடுகள்தான். அவற்றில் கோட்டாபய அரசு எந்த மேம்பாட்டையும் செய்யவே இல்லை. வேண்டுமானால் அந்த செயற்பாடுகளை இன்னும் அடித்து மூடாமல் விட்டு வைத்திருக்கும் தாராளத்தை இதுவரை கோட்டா அரசு காட்டியுள்ளது என்று மட்டும் கூறலாம். அவ்வளவுதான். இதுதான் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான கோட்டா அரசின் வாய்ப்பந்தல் தத்துவத்தின் மகத்துவம்.

இந்த நிலையில் மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பாகக் கோட்டாபய அரசின் போக்கை மதிப்பீடு செய்யும் முக்கிய நடவடிக்கை இம்மாத இறுதியில் இடம்பெற இருக்கின்றது.

பொருளாதார நெருக்கடியில் துவண்டுபோய், சேடம் இழுக்கும் நிலையில் இருக்கும் இந்த அரசின் எதிர்காலம் பற்றிய தலையெழுத்தை நிர்ணயிக்கப் போகும் முக்கிய விவகாரமாக இந்த மதிப்பீடு இடம்பெறுகின்றது. இப்பணிக்காக – கோட்டாபய அரசின் மனித உரிமைகள் பேணும் சீத்துவத்தை மதிப்பீடு செய்வதற்காக – ஐரோப்பிய ஒன்றியத்தில் உயர்மட்டக்குழு ஒன்று மாத இறுதியில் கொழும்புக்கு வருகின்றது.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி, இப்போது சேடம் இழுத்துக் கொண்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்துக்கு உயிர் வாழ்வதற்கான வெளிநாட்டு அந்நிய செலவாணி என்ற பிராணவாயுவை வழங்கிக் கொண்டிருப்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. வரிச்சலுகைதான். இந்த வரிச் சலுகையைப் பயன்படுத்தி ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் தைத்த ஆடைகள் மற்றும் இன்னோரன்ன பொருள்கள் மூலம்தான் நாட்டின் பொருளாதாரம் மூச்சு விடுவதற்கான கொஞ்ச நஞ்ச அந்நிய செலாவணியாவது கிட்டுகின்றது. அதுவும் தொடருமா என்பது சவாலுக்கு உள்ளாகியிருக்கிறது.

நாட்டில் மனித உரிமைகளைப் பேணுவதில் முன்னைய ராஜபக்ஷ அரசு மிக மோசமாக நடந்து கொண்டமையால் இந்த வரிச்சலுகை 2010 இல் பறிபோனது. எனினும் நல்லாட்சி அரசு கெஞ்சிக் கூத்தாடி 2017 இல் அதை ஒருவாறு பெற்றுக்கொண்டது – மனித உரிமைகள் விடயத்தில் மேம்பாட்டை பேணுவோம் என்று உறுதி அளித்ததன் மூலம்.

ஆனால் மீண்டும் அதிகாரமேறிய ராஜபக்ஷாக்களின் அரசு, மனித உரிமைகளைப் பேணும் உறுதிமொழிகளைக் காற்றில் பறக்கவிட்டு, தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கிவிட்டது. அதனால் இந்தச் சலுகையை நீக்கும் தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் தனது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி விட்டது.

இவ்விடயம் குறித்து இங்கு நேரடியாக மதிப்பீடு செய்து, இறுதிப் பரிந்துரையை வழங்கவே ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழு மாத இறுதியில் இலங்கை வருகிறது. கோட்டாபய ராஜபக்ஷ அரசுக்கு இது சோதனைக் காலம்தான். பெரும்பாலும் அது இந்தப் பரீட்சையில் சித்தி அடைவது துர்லபமே.

# 36 கொரோனா பூதவுடல்கள் வெளிமாவட்டத்தில் தகனம்

## யாழ்.போதனா பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி தகவல்



யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை வரை 36 கொவிட் பூதவுடல்கள் வெளிமாவட்டத்தில் மின் தகனம் செய்யப்பட்டுள்ளன என யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ் போதனா வைத்தியசாலையில் கொவிட் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களின் பூதவுடல்கள் உரிய சுகாதார வழிகாட்டல்களுடன் வெளிமாவட்டங்களுக்கு மின் தகனத்துக்காக அனுப்பப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அனுப்பப்படுகின்றன சில பூதவுடல்களுக்கு உறவினர்களால் மின் தகனம் செய்வதற்குரிய பணம் மற்றும் பூதவுடல்களைப் பாதுகாப்பாகக் கொண்டு செல்வதற்கான பெட்டிகளை வாங்க இயலாதவர்களுக்கு அவற்றைக் கொடையாளர்களிடம் பெற்று அனுப்புகிறோம்.

தகனம் செய்வதற்காக அனுப்பப்படும் பூதவுடல்களுடன் அவர்களின் உறவினர்கள் கூடவே செல்ல விரும்பினால் அவர்களில் சிலரை மட்டும் அழைத்துச் செல்கிறோம்.

உறவினர்கள் எல்லோரும் செல்ல முடியாத சூழ்நிலையில் இறந்த பூத உடல்களை அடக்கம் செய்வதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் யாழ். போதனா வைத்தியசாலையால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இறந்தவர்களின் உறவினர்கள் எல்லோரும் அதில் கலந்து கொள்ள முடியாவிட்டாலும் அங்கு நடைபெறும் தருணத்தை அனைவரும் ஏற்றுக் கொண்டு அவர்களுக்குரிய அஞ்சலிகளைத் தத்தம் வீடுகளில் செலுத்த வேண்டும்.

போதனா வைத்தியசாலையில் கொவிட் தொற்றால் இறந்த பூதவுடல்கள் பிரேத அறையில் உரிய முறையில் அதற்கு உரிய மரியாதைகளுடன் பாதுகாக்கப்படுகின்றன. யாழ். போதனா வைத்தியசாலையின் நலன்புரி சங்கத்தினர் இறந்த பூத உடல்களை வெளிமாவட்டத்துக்குக் கொண்டு செல்வதற்கு மிகவும் அர்ப்பணிப்புடன் தமது சேவைகளை வழங்கி வருகிறார்கள்.

உயிரிழந்த பூத உடல்களை வெளிமாவட்டத்துக்கு அனுப்புவதற்கு ஏற்ற ஒழுங்குகளை கவனிப்பதற்காக வைத்தியர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் ஒவ்வொரு பூதவுடல்களும் உரிய முறையில் தயார் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படுகின்றன.

ஆகவே, கொவிட் தொற்றின் காரணமாக தமது உயிர்களை இழந்தவர்களின் ஆத்மா சாந்தி அடைவதற்காக உரிய சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி அவர்களுக்குரிய கடமைகளை நிறைவேற்றுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அநுராதபுரம் குளத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

அநுராதபுரம் – ஹொரவப் பொத்தானை குளத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



குளத்தில் சடலமொன்று மிதப்பதாக பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து குறித்த சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஹொரவப்பொத்தானை – கம்மெத்த கம்மானய பகுதியைச் சேர்ந்த ரன்ஹாமிகே வணிகசேகர (வயது – 62) என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

குறித்த நபர் இக்குளத்தில் தொடர்ச்சியாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமையுடன், சில நேரங்களில் மது அருந்துகின்றவர் எனவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஆனாலும் இவருடைய மரணத்துக்கான காரணம் இன்னமும் கண்டறியப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில், பிரேத பரிசோதனை முடிவடைந்தவுடன் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# மதுபான நிலையங்கள் திறக்கப்பட்டமையினால் வன்முறை அதிகரிப்பு; பலர் வைத்தியசாலைகளில்!

குடிபோதையில் மிகவும் மோசமான முறையில் செயற்பட்ட பலர் கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மதுபான நிலையங்கள் திறக்கப்பட்ட நிலையில் குடிபோதையில் வன்முறையை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டமையே இதற்குக் காரணமாகும். அதற்கமைய 52 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குடிபோதையில் குழப்பம் ஏற்படுத்தி காயமடைந்தவர்களில் 5 பெண்களும் உள்ளடங்குகின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர்கள் அனைவரும் 17 முதல் 60 வயதிற்குட்பட்டவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

மதுபான நிலையம் திறக்கப்பட்டதன் பின்னர் அதன் விளைவுகளை உணர முடிந்ததாக வைத்தியசாலை பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் காரணமாக அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. இந்நிலையில் கடந்த சனிக்கிழமை மீண்டும் திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# கனேடிய நாடாளுமன்றத் தேர்தல் பிரதமராகிறார் ட்ரூடோ!




கனடா நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை கிடைக்காத நிலையிலும், தனது பிரதமர் பதவியை ஜஸ்டின் ட்ரூடோ தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

ட்ரூடோவின் லிபரல் கட்சி மக்களவையில் உள்ள 338 இடங்களில் 156 இடங்களில் வெற்றிபெற்று முன்னிலைப் பெற்றுள்ளது.

2019ஆம் ஆண்டின் கடைசி வாக்கெடுப்பில் இருந்து சிறிது மாற்றம் ஏற்பட்டது எனினும் பெரும்பான்மைக்கு இது போதுமானதல்ல.

முக்கிய எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சி 122 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஜக்மீத் சிங் தலைவராக இருக்கும் நியூ டெமாக்ரெட் கட்சி 27 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

நாடாளுமன்றத்தில் மொத்தமுள்ள 338 இடங்களில் பெரும்பான்மை பெற 170 இடங்கள் தேவைப்படும். கடந்த தேர்தலில் ட்ரூடோவின் லிபரல் கட்சிக்கு 155 இடங்களே கிடைத்தன. இம்முறை அதனைவிட ஒரு இடத்தை அக்கட்சி கூடுதலாகப் பெற்றுள்ளது.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் கட்சிக்கு பெரும்பான்மை பலம் கிடைக்காததால், கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைத்தார்.

2023ஆம் ஆண்டு அடுத்த தேர்தல் நடைபெறவேண்டிய நிலையில், அங்கு முன்கூட்டியே தேர்தல் அறிவிக்கப்பட்டது. கனடாவில் கடந்த இரண்டாண்டுகளில் நடந்திருக்கும் இரண்டாவது நாடாளுமன்றத் தேர்தல் இதுவாகும்.

மேலும் இரண்டு ஆண்டுகள் பதவிக் காலம் இருக்கும்போது தேவையற்ற வகையில் முன்கூட்டியே தேர்தல் நடத்துகிறார் என ஜஸ்டின் ட்ரூடோ மீது எதிர்க்கட்சிகள் தொடர்ந்து குற்றம்சாட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது.



## வீதிகளில் போராட்டங்களை நடத்திய காலநிலை ஆர்வலர்கள் 41 பேர் கைது

வீதிகளில் போராட்டங்களை நடத்திய காலநிலை ஆர்வலர்கள் 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பிரித்தானியாவின் முக்கிய வீதிகள் பலவற்றினை மறித்து காலநிலை ஆர்வலர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் இந்த போராட்டங்கள் பொறுப்பற்றது மற்றும் ஆபத்தானது என போக்குவரத்து செயலாளர் கிராண்ட் ஷாப்ஸ் கூறியுள்ளார்.

பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கென்ட் பொலிஸாரினால் 12 பேரும் ஹெர்ட்ஃபோர்ட்ஷயர் பொலிஸாரினால் 16 பேரும் கைது செய்யப்பட்டனர்.

## பெண் பிள்ளைகளுக்கான பள்ளிகள் மூடல்; யுனெஸ்கோ, யுனிசெவ் கண்டனம் தெரிவிப்பு

தலிபான்கள் கைப்பற்றியுள்ள ஆப்கானிஸ்தானில் பெண் பிள்ளைகள் படிப்பதற்கான பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டமை அவர்களின் கல்வி உரிமையைப் பறிப்பதாகும் என்று ஐ.நா.வின் யுனெஸ்கோ, யுனிசெவ் அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

தலிபான் தீவிரவாதிகள் காபூல் நகரைக் கடந்த மாதம் கைப்பற்றியபின் அளித்த வாக்குறுதிக்கு மாறாக இப்போது செயல்படுகிறார்கள். காமா செய்திகள் தரப்பில் கூறுகையில், ஆப்கானிஸ்தான் எமிரேட் அரசில் அனைத்து தனியார், அரசு சார்பில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள், மதரீதியான பள்ளிக்கூடங்கள் சனிக்கிழமை முதல் திறக்கலாம். ஆனால், மாணவர்கள், ஆசிரியர்கள் மட்டுமே வரலாம் எனத் தெரிவித்துள்ளது.

1996-2001-ஆம் ஆண்டுவரை இருந்த அரசைப்போல் தலிபான் அரசு இருக்காது, பெண்களுக்குக் கல்வி உரிமை, வேலைக்குச் செல்லும் உரிமை வழங்கப்படும் என்று தலிபான்கள் உறுதியளித்த நிலையில் அதிலிருந்து மாறுபட்டுள்ளனர். இந்நிலையில் யுனிசெவ், யுனெஸ்கோ அமைப்பு பெண் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களை மூட உத்தரவிட்டமை குறித்துக் கண்டனம் தெரிவித்துள்ளது.

unicef UNESCO

யுனெஸ்கோ விடுத்த அறிக்கையில், அனைத்து நிலைகளிலும் பெண் குழந்தைகளுக்குக் கல்வி மறுக்கப்பட்டால், அவர்களைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுமதிக்காவிட்டால் மீளமுடியாத பின்விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

குறிப்பாக, உயர்நிலைப் பள்ளி அளவில் மாணவிகளுக்குத் தாமதமாக அனுமதி அளிப்பது அவர்களின் கல்வியிலும், வாழ்க்கையிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஆப்கானின் எதிர்காலம் நன்கு படித்த மாணவர்கள், மாணவிகளைச் சார்ந்திருக்க வேண்டும். ஆதலால் ஆப்கானை நிர்வாகம் செய்யும் ஆட்சியாளர்கள், அனைத்துப் பிள்ளைகளும் கல்வி உரிமையைப் பெற சமமான அளவில் வாய்ப்பை வழங்க வேண்டும்.

பள்ளிகளை அனைத்துப் பிரிவினருக்கும் திறக்க வேண்டும். அனைவருக்கும் கல்வி உரிமை வழங்கப்பட வேண்டும். குறிப்பாகப் பெண் பிள்ளைகளுக்குக் கல்வி அவசியம் என்று யுனிசெவ் தெரிவித்துள்ளது.



## எங்களை யாரும் கட்டுப்படுத்த முடியாது தலிபான்கள் இம்ரான் கானுக்கு பதிலடி

பாகிஸ்தான் மட்டுமல்ல வேறு யாரும் எங்களைக் கட்டுப்படுத்த முடியாது என தலிபான்கள் செய்தித் தொடர்பாளர் ஜபிபுல்லா முஜாஹீத் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் அடுத்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக அமைதியான முறையில் ஆட்சி நடக்க வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து தலிபான்களுக்கு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் யோசனை தெரிவித்தார்.

சி.என்.என். செய்தி நிறுவனத்துக்குப் பேட்டியளித்த பிரதமர் இம்ரான் கான், ஒட்டுமொத்த ஆப்கானிஸ்தானும் தலிபான்களின் கைகளில் உள்ளது.

இப்போது அவர்கள் மனதுவைத்து அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைத்து அனைவரையும் உள்ளடக்கிய ஓர் ஆட்சியைக் கொடுத்தால் அடுத்த 40 ஆண்டுகளுக்கு நாட்டில் அமைதி நிச்சயமாக நிலவும். ஆனால், இதில் ஏதேனும் சறுக்கல் ஏற்பட்டால் பெரிய குழப்பத்துக்கு வழிவகுக்கும். கூடவே உலகின் மிகப்பெரிய மனிதநேய நெருக்கடி ஏற்படும், அகதிகள் பிரச்சினை உருவெடுக்கும் என்று பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்திருந்தார்.

இதனை முன்வைத்து பேசியுள்ள தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபிபுல்லா முஜாஹீத், பாகிஸ்தான் மட்டுமல்ல வேறு யாரும் எங்களைக் கட்டுப்படுத்த முடியாது. நாங்கள் இப்படித்தான் ஆட்சி நடத்த வேண்டும். அனைவரையும் உள்ளடக்கிய ஆட்சியை நடத்த வேண்டும் என்று கட்டுப்படுத்த முடியாது என்று தெரிவித்துள்ளார்.

## பிரிட்டன் - பிரான்ஸ் பேச்சு இரத்தானது

அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா இடையேயான அவுகஸ் உடன்பாட்டால் எழுந்திருக்கும் அசாதாரண நிலையால் பிரிட்டனுடனான பாதுகாப்பு பேச்சினை பிரான்ஸ் ரத்து செய்திருக்கிறது.

அவுகஸ் உடன்பாட்டால் கோபமடைந்திருக்கும் பிரான்ஸ், அமெரிக்கா தனது முதுகில் குத்திவிட்டதாகவும் பொய் கூறிவருவதாகவும் கடுமையாக விமர்சித்து வருகிறது.

இந்த நிலையில் பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சர் இந்த வாரம் நடக்க இருந்த பாதுகாப்பு தொடர்பான சந்திப்பை பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சர் ரத்து செய்துள்ளார்.



இரண்டு நாள் நடக்க இருந்த இந்தப் பேச்சு ரத்து செய்யப்பட்டிருப்பதாக பிரான்ஸுக்கான பிரிட்டனின் முன்னாள் தூதுவர் உறுதி செய்துள்ளார்.

மேலும் அவுகஸ் உடன்பாட்டால் பிரான்ஸ் கவலைப்படத் தேவையில்லை என்று பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் கூறியுள்ளார்.

அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு இடையேயான அவுகஸ் உடன்பாடு கடந்த வாரம் கையெழுத்தானது.

இதன்படி நீர்மூழ்கிகள் உள்ளிட்ட பல்வேறு இராணுவத் தொழில்நுட்பங்கள் ஆஸ்திரேலியாவுக்கு வழங்கப்படுகின்றன.

இதனால் பிரான்ஸுடன் ஆஸ்திரேலியா செய்து கொண்டிருந்த நீர்மூழ்கி உடன்பாடு ரத்து செய்யப்பட்டமை பிரான்ஸுக்கு கோபத்தை ஏற்படுத்தியிருக்கிறது

# தமிழகத்திற்கு வாரந்தோறும் 50 லட்சம் தடுப்பூசிகள் பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்



தமிழகத்திற்கு வாரந்தோறும் 50 லட்சம் கொரோனாத் தடுப்பூசிகளை வழங்க வேண்டும் என பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். தமிழகத்துக்கு கொரோனாத் தடுப்பூசிகளை வழங்கி, கொரோனாத் தொற்றுக்கு எதிரான எங்களின் முயற்சிகளுக்கு ஆதரவளித்து வரும் மத்திய அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும் ஆரம்பக்கட்டத்தின் முதல் 4 மாதங்களில் தடுப்பூசி செலுத்துதலில் போதிய வேகம் இல்லாததால், தற்போது தமிழகத்தில் செலுத்தப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கை, தேசிய சராசரியை விடக் குறைவாக உள்ளது. இதனால், கடந்தகாலப் பற்றாக் குறையை ஈடுசெய்ய தமிழகத்துக்கு உடனடியாகக் கூடுதல் தடுப்பூசிகள் தேவைப்படுகின்றன.

ஒக்டோபர் 31ஆம் திகதிக்கு முன் பாகத் தகுதியுள்ள அனைவருக்கும் கொரோனாத் தடுப்பூசிகளைச் செலுத்த வேண்டியுள்ளது. தமிழகத்தில் ஒவ்வொரு வாரமும் 50 லட்சம் கொரோனாத் தடுப்பூசி டோஸ்களை வெற்றிகரமாகச் செலுத்த முடியும் என்பதால், அந்த எண்ணிக்கையில் கொரோனாத் தடுப்பூசிகளை உயர்த்தி வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கிறேன், என்று அந்தக் கடிதத்தில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

# தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு மட்டுமே பொது இடங்களில் நுழைவதற்கு அனுமதி

இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் அகமதாபாத் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில், தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்கள் நேற்றுமுதல் சில பொது வசதிகளைப் பயன்படுத்த முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அகமதாபாத் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான சான்றிதழை எப்போதும் தங்கள் வசம் வைத்திருக்க வேண்டும் என்றும் மாநகராட்சியின் கீழ் உள்ள பொதுப்போக்குவரத்து சேவைகள், பொதுக் கட்டடங்கள், அரசு சார்ந்த பொது இடங்கள்போன்றவற்றில்சான்றிதழ்கள்சரிபார்க்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி செலுத்தாதவர்களுக்கு பேருந்துகள், நூலகங்கள், உடற்பயிற்சிக்கூடம், விளையாட்டு வளாகங்கள், நீச்சல் குளங்கள், ஆற்றங்கரை உள்ளிட்ட பொது இடங்களில் நுழைவதற்கு அனுமதியில்லை என்றும் அகமதாபாத் மாநகராட்சித் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் பராமரிப்பில் உள்ள பூங்காக்களின் இயக்குநராக உள்ள ஜிக்னேஷ் படேல் என்பவர் இந்த நடைமுறைகள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும்போது, 'கொரோனாத் தொற்றுநோய்க்கு எதிரான ஒரே ஆயுதம் தடுப்பூசிதான் என்பதால், தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்களுக்குபூங்காக்கள்மற்றும்தோட்டங்களுக்குள் நுழைய தடை விதிக்கப்படும். முதல் தவணைத் தடுப்பூசி செலுத்திக்கொண்டு இரண்டாவது தவணைத் தடுப்பூசிக்காகக் காத்திருப்பவர்களுக்கும்கூட பொதுப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் பொது இடங்களில் நுழைய அனுமதியில்லை' எனக் குறிப்பிட்டார்.





# 1-5 வரையான வகுப்புகளுக்கும் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பம்

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் 50% மாணவர்களுடன் 1 முதல் 5 வரையிலான வகுப்புகளுக்கும் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

இந்தியா முழுவதும் கொரோனா கடந்த 2020 ஆம் ஆண்டு பரவிய நிலையில், பாடசாலைகள் மற்றும் கல்லூரிகள் மூடப்பட்டன. கொரோனாவைக் கட்டுப்படுத்த தொடர்ந்து ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுவந்ததால் பாடசாலைகள் இயங்கவில்லை.

தற்போது பாதிப்புகள் குறைந்து தளர்வுகள் அறிவிக்கப்பட்டதையடுத்து ஒரு சில மாநிலங்களில் பாடசாலைகள் திறக்கப்பட்டன. தமிழகத்தில் கடந்த முதலாம் திகதி முதல், 9 முதல் 12 வரையிலான வகுப்புகளுக்கு பாடசாலைகள் இயங்க ஆரம்பித்துள்ளன.

மத்திய பிரதேசத்திலும் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை 50 சதவீத மாணவர்களைக் கொண்டதாக சுழற்சி முறையில் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதனைத்தொடர்ந்து 50% மாணவர்களுடன் 1 முதல் 5 வரையிலான வகுப்புகளுக்கும் பாடசாலைகள் நேற்று முதல் திறக்கப்படுகின்றன என மத்தியப் பிரதேச அரசு அறிவிப்பு வெளியிட்டது. மாணவர்கள் முகக்கவசம் அணிவது, கைகளை அடிக்கடி சுத்தம் செய்வது, சமூக இடைவெளி பேணுதல் உள்ளிட்டவற்றைக் கட்டாயம் கடைப்பிடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# 100ஆவது பிறந்ததின நினைவு



## அமரர் கண்மணி அம்மா அருணாசலம்

**தோற்றம் : 21.09.1921** **மறைவு: 17.06.2002**

**அம்மா,**

நீங்கள் இறையடி எய்திய போது இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ள கொடுத்து வைக்கவில்லை எனினும் உங்கள் நூறாவது பிறந்த தினத்தில் நாம் உலகின் பல முனைகளில் இருந்த வண்ணம் எமது உணர்வைப் பகிர்ந்து கொள்ளும் அரிய வாய்ப்பையிட்டு உணர்வுடன் கலந்த பூரிப்பை எய்தும் அதே வேளை, ஒரு தாய் எந்த அளவு அன்பையும் பாசத்தையும் கொடுக்க முடியுமோ அதைவிட பன்மடங்கு அன்பையும் பாசத்தையும் வாரி வாரி சொரிந்தாயே அவை யாவற்றிற்கும் எனது உளங்கனிந்த நன்றி பலகோடிகள்.

**(மகன் அருணாசலம் இராஜரட்ணம்,அவுஸ்திரேலியா)**

**அம்மா!** நீங்கள் இம்மண்ணில் பிறந்து நூறு ஆண்டுகள் ஓடி விட்டன, அம்மா! உங்கள் கதைகள் பேச்சுகள் இன்றும் எம் மனதில் வந்து போகின்றதே அம்மா.நாங்கள் யாவரும் ஆண் பிள்ளைகள் என்பதால் உங்கள் சமையல் வேலைகளுக்கு நான் உதவுவதால் என்னை உங்கள் மகள் என்றே சொல்வீர்களே அம்மா!.. ஒருமுறை நீங்கள் கதவை மூடும்போது பூனைக்குட்டி ஒன்று தவறுதலாக அகப்பட்டு காயம்பட்டு இறந்துவிட அதனால் மிகவும் மனம் நொந்து குடும்பத்துக்காக அன்று முதல் நல்லைக் கந்தனை நினைத்து ஆறு நாட்கள் நோன்பிருந்து கந்த சஷ்டி விரதம் பிடித்தீர்களே.ஒருமுறை உபவாச நாளில் நீங்கள் மயங்கி விழுந்தும் கூட நான் அறிந்தவரையில் அவ்விரதத்தை முடித்ததாக ஞாபகம் இல்லையம்மா! ஆண்டுகள் பல உருண்டோடி விட்டாலும் உங்கள் அன்பான கதைகள் எம் மனதில் நிழலாடுகின்றன . என்றும் உங்கள் ஆசியுடன் எம் வாழ்வைத் தொடர்கின்றோம்.

**உங்கள் நீங்கா நினைவுகளுடன் பிள்ளைகள் சார்பில் மகன் அருணாசலம் தர்மலிங்கம் லண்டன்**

அம்மா நீங்கள் அவதரித்து இன்றோடு
அகவைகள் நூறு ஆகிவிட்டதம்மா
பண்புடன் கதை சொல்லி சீராட்டி எங்களை
கண்ணின் மணியாக வளர்த்தீர்கள் அம்மா!
நீங்கள் சொல்லி வளர்த்த கதைகள் பல
எங்கள் மனதினில் இன்னும் வந்துபோகுதம்மா
நேற்றுப் போல் இருக்கிறது நீங்கள் எமைப் பிரிந்து
இன்று எம்முடன் நீங்களில்லை என்றாலும்
நாம் வாழும் காலங்கள் உள்ளவரை
நல்வழி காட்டும் உங்கள் ஆசிகள்...
உருவத்தால் நீங்கள் இன்றில்லை என்றாலும்
உங்கள் அறிவுரைகள் என்றும் எமைவழிகாட்டும்.

**மற்றும் பிள்ளைகள்**

எங்களோடு நீங்கள் வாழ்ந்த காலம் மகிழ்வானதாகவும் இனிமையான ஒன்றாகவும் இருந்தது.எல்லோரையும் சமமாக கருதி ,பண்புடன் பழகி, அன்புடன் வழிநடத்தும் பண்பு உங்களிடம் இருந்தது.நீங்கள் நல்ல குணமுள்ள அம்மாவாக,பண்பான மாமியாக,அரவணைக்கும் அப்பம்மாவாக எல்லோரையும் கவர்ந்த ஒரு ஜீவனோடு நாம் வாழ்ந்தோம் என்பதை நினைக்க எமக்கு மகிழ்வாகவும் பெருமையாகவும் நிறைவாகவும் உள்ளது. உங்களின் இழப்பு எமக்கு என்றைக்கும் இழப்பு தான் மாமி – அப்பம்மா.

**உங்கள் பிரிவால் வாடும்**
**மருமக்கள்,பேரர்,பூட்டப்பிள்ளைகள்**

**குடும்பத்தினர்**

**இல.689 பருத்தித்துறை வீதி,**
**நல்லூர்,யாழ்ப்பாணம்.**



# குப்பைக்குள் சிக்கிய முகவரியால் கல்முனையில் சிக்கலில் சிலர்

கல்முனை மாநகர சபையினால் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்த பொது இடங்களில் குப்பைகள் கொட்டுவது மற்றும் பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடைஞ்சல் விளைவிப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனும் அறிவுறுத்தலுக்கு அமைவாக சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களில் பிரதான வீதிகள், மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் தொடர்ந்தும் குப்பைகள் கொட்டப்பட்டுவருவதாக கிடைத்த தகவலை அடுத்து அந்த குப்பைகளில் இருந்து பெறப்பட்ட முகவரிகளை அடிப்படையாக கொண்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளோம் என கல்முனை மாநகர சபை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அர்சத் காரியப்பர் தெரிவித்தார்.

சமூக ஊடகங்களில் பேசுபொருளாக மாறியிருந்த குப்பைகளினால் மக்கள் அசௌகரியம் எனும் இவ்விவகாரத்திற்கு தீர்வு காணும் நோக்கில் கல்முனை மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி ஏ.எம். ரக்கிபின் ஆலோசனையின் பேரில் கள விஜயம் செய்த டாக்டர் அர்சத் காரியப்பர் தலைமையிலான சுகாதார குழுவினர் அந்த குப்பைகளை அகற்றிய போது அந்த குப்பைகளிலிருந்து மின்சார சபை நிலுவைப் பட்டியல், நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை நிலுவைப்பட்டியல், டெலிகொம் நிலுவைப் பட்டியல் உட்பட முகவரி அச்சிடப்பட்ட ஆவணங்களை கைப்பற்றினர்.

குப்பைகள் கொட்டப்பட்ட 23 இடங்களில் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் கல்முனையில் இருந்து 20 பேரின் முகவரியும், சாய்ந்தமருதில் இருந்து 23 பேரும், மருதமுனையில் இருந்து 18 பேரும், நற்பிட்டிமுனையில் இருந்து 17 பேருமாக அந்த முகவரிகளை அடிப்படையாகக் கொண்டு அடையாளம் காணப்பட்டுள்ளானர். அந்த 78 பேருக்கும் எதிராக பொதுமக்களுக்கு இடைஞ்சல் செய்தமைக்காக நீதிமன்றத்தின் முன்னிலையில் நிறுத்த போகிறோம் என அங்கு கருத்து தெரிவித்த போது பிரதம சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இங்கு கல்முனை மாநகர சபை சுகாதார பிரிவு உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

# கைவசமிருக்கும் தடுப்பூசியைப் பெற இளைய சமுதாயம் முன்வர வேண்டும்

## வைத்திய அதிகாரி தஸ்ஸீமா வசீர் தெரிவிப்பு

கைவசமிருக்கும் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள இளைய சமுதாயம் முன்வர வேண்டும். நாட்டில் வேகமாக பரவிக்கொண்டு வரும் கொரோனா அலையிலிருந்து எம்மை நாம் பாதுகாத்து கொள்ள வேண்டும். அனைவரும் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் என காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்ஸீமா வசீர் தெரிவித்தார்.

சினோபோர்ம் தவிர்த்து வேறு தடுப்பூசியை ஏற்றுவது தொடர்பில் இன்னும் நிச்சயிக்காத நிலையில் கையிலிருக்கும் தடுப்பூசியை தவறவிட்டு வேறு ஒரு தடுப்பூசியை பெற காத்திருப்போரின் நிலை பஸ்ஸை ஓடவிட்டு பின்னர் கையைக்காட்டும் நிலைக்கே சென்றுவிடும்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் வழிகாட்டலில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்ஸீமா வசீர் தலைமையில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்ப நல உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச சபை, நுளம்பு கள தடுப்புப் பிரிவினர் இணைந்து 20 தொடக்கம் 29 வயதானவர்களுக்கு கொவிட்-19 முதலாம் கட்ட தடுப்பூசி வழங்கும் நிகழ்வுகள் 4 நிலையங்களில் நடைபெற்றன.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் 20 தொடக்கம் 29 வயதானவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் தடுப்பூசியேற்றலில் 330 பேர் இன்று தடுப்பூசியினை பெற்றுள்ளனர். என்றார்.



# மட்டக்களப்பில் 20 வயதுக்கு மேற்பட்டோருக்கு நேற்று முதல் கொரோனாத் தடுப்பூசி வழங்கல்

மட்டக்களப்பு- களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள், நேற்றுக்காலை முதல் முன்னெடுக்கப்படுகின்றன.

களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.இராஜேந்திராவின் தலைமையில், பெரியகல்லாறு, செட்டிபாளையம் ஆகிய பகுதிகளில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் பெரியகல்லாறிலுள்ள அருளானந்தர் வித்தியாலயம், உதயபுரம் தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றில் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. இதில், பெருமளவான இளைஞர் மற்றும் யுவதிகள் ஆர்வத்துடன் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள நீண்ட வரிசையில் காத்திருந்து தடுப்பூசி ஏற்றிக்கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசிகள் வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சம்பூரில் மூன்றாவது நாளாக தடுப்பூசி இளைஞர்கள் ஆர்வம் காட்டவில்லை

20 - 29 வயதுக்குட்பட்டவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் பணிகள் இன்று மூன்றாவது நாளாக சம்பூர் பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வழிகாட்டலில் மூதூர் பிரதேச செயலக மற்றும் சம்பூர் சிறுமலர், இளம் பரிதி இளைஞர்கழக உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு வைத்தியசாலை ஊழியர்களால் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது .

எனினும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளும் குறித்த வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகளின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி நிலவுகின்றமையை அவதானிக்க கூடியதாக இருக்கிறது. இளைஞர்களுக்கு முறையான தடுப்பூசி பற்றிய விழிப்புணர்வின்மையே இதற்கான காரணமாகும். சமூகத்தில் இளைஞர்களிடையே பரவிய தடுப்பூசி பற்றிய தவறான புரிந்துணர்வை தெளிவுபடுத்த அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டுமென தெரிவிக்கப் படுகிறது

# மணல் அகழ்வில் ஈடுபட்ட 3 பேர் திருகோணமலை பகுதியில் கைது

திருகோணமலை – மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெலுஓய வனப்பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொரவெவ பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலுக்கு அமைய குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள், மஹதிவுல்வெவ மற்றும் ஹொரவபொத்தானை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதன்போது, மணல் அகழ்விற்காக பயன்படுத்திய டிராக்டரினை பொலிஸார் கையகப்படுத்தியுள்ளனர்.

# சம்பூர் வைத்தியசாலைக்கு கிருமிநாசினி உபகரணம்

திருகோணமலையின் அன்பின் பாதை சமூகம் எனும் அமைப்பினரால் சம்பூர் பிரதேச வைத்தியசாலைக்கு நேற்றைய தினம் நோய்க்கால நிலைமையைக் கருத்திற்கொண்டு கிருமிநாசினி தெளிக்கும் உபகரணம் ஒன்றும் மற்றும் பூமரங்களை அழகுபடுத்தும் கத்திரிக்கோல் ,மண்வெட்டி என்பனவும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான நிதி உதவியினை நிற்சாமம் உதவும் கரங்கள் சுவிஸ் எனும் அமைப்பைச் சேர்ந்த அரவிந் பூமிகா அவர்கள் வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது .

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பெங்களூர் அணியை வீழ்த்தி வெற்றிபெற்றது கொல்கத்தா



ஐ.பி.எல். ரி-20 தொடரின் 31ஆவது லீக் போட்டியில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியை எதிர்கொண்ட கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 9 விக்கெட்டுகளால் அபார வெற்றியைப் வெற்றிபெற்றுள்ளது.

அபுதாபி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்துக் களமிறங்கி, கொல்கத்தா அணியின் பந்துவீச்சைச் சமாளிக்க முடியாது 19 ஓவர்களில் 92 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. தேவ்தத் படிக்கல் 22 ஓட்டங்களையும் ஸ்ரீகர் பாரத் 16 ஓட்டங்களையும் எடுத்தனர். கொல்கத்தா அணியின் வருண் சக்கரவர்த்தி மற்றும் அன்ட்ரே ரஸல் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் பெர்குசன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இலகுவான வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 10 ஓவர்களில் ஒரேயொரு விக்கெட்டை மட்டும் இழந்து வெற்றியிலக்கையடைந்தது. சுப்மான் கில் 48 ஓட்டங்களையும் வெங்கடேஷ் ஐயர் ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களையும் எடுத்தனர். பெங்களூர் அணியின் சஹால் வீழ்த்தப்பட்ட ஒரேயொரு விக்கெட்டைக் கைப்பற்றினார். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக வருண் சக்கரவர்த்தி தெரிவு செய்யப்பட்டார்.

நேற்றைய போட்டியில் கிடைத்த வெற்றியின்மூலம் இரண்டு புள்ளிகளைப் பெற்ற கொல்கத்தா அணி, 6 புள்ளிகளோடு ஐந்தாமிடத்திலுள்ளது.

## ஐ.பி.எல்லில் அறிமுகமான வனிந்து ஹஷரங்க முதல் போட்டியில் பந்துவீச்சிலும் ஏமாற்றம்




இலங்கை அணியின் சகலதுறை வீரர் வனிந்து ஹஷரங்க ஐ.பி.எல். தொடரின் நேற்றைய போட்டியில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்காக அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார். பெங்களூர் அணிக்காக அறிமுகத்தை பெற்றுக்கொண்ட வனிந்து ஹஷரங்க, இந்த ஆண்டு ஐ.பி.எல். தொடரில் விளையாடும் முதல் இலங்கை வீரர் என்ற அடையாளத்துக்கும் உரியவரானார்.

இலங்கை அணியின் மற்றுமொரு வீரரான துஷ்மந்த சமீர, வனிந்து ஹஷரங்க விளையாடும் பெங்களூர் அணியில் இடம்பெற்றுள்ளார். நேற்றைய போட்டியில் அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லையெனினும்தொடர்ந்துவரும் போட்டிகளில் இவருக்கும் விளையாடும் சந்தர்ப்பம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றைய போட்டியில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய வனிந்து ஹஷரங்க, முதலாவது பந்திலேயே ஓட்டமெதனையும் பெறாது வருண் சக்கரவர்த்தியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். பின்னர் பந்து வீசிய அவர், 2 ஓவர்களில் விக்கெட் எதனையும் கைப்பற்றாது 20 ஓட்டங்களை விட்டுக்கொடுத்திருந்தார்.

ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, வரும் வெள்ளிக்கிழமை தனது அடுத்த போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸைச் சந்திக்கவுள்ளது.

## பஞ்சாப் எதிர்த்து ராஜஸ்தான் ஐ.பி.எல்லில் இன்று மோதல்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும் ஐ.பி.எல்.2021 தொடரின் இரண்டாம் பகுதியின் இன்றைய போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணியும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும் ஒன்றையொன்று எதிர்கொள்ளவுள்ளன.

டுபாயில் நடைபெறும் இந்தப் போட்டி இலங்கை நேரப்படி இரவு 7.30க்கு ஆரம்பமாகும்.

இதுவரை நடைபெற்றுள்ள போட்டிகளின்படி ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 7 போட்டிகளில் 3 இல் வெற்றி பெற்று 6 புள்ளிகளோடு, புள்ளிப்பட்டியலில் 6ஆம் இடத்திலும் பஞ் சாப் அணி 8 போட்டிகளில் 3 இல் வென்று 6 புள்ளிகளோடும் 7ஆம் இடத்திலும் உள்ளன.





## சாவ் கால்பந்தாட்டத் தொடருக்கான பயிற்சிகளை சவுதியில் ஆரம்பித்தது இலங்கை தேசிய அணி



அடுத்த மாதம் நடைபெறவுள்ள தொற்காசிய கால்பந்தாட்டச் சம்மேளன (சாவ்) சம்பியன்ஷிப் தொடரில் கிண்ணத்தை வெல்வதே இலங்கைக் கால்பந்தாட்ட அணிக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கு என்று இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணி அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை மாலைதீவுகளில் இடம்பெறவுள்ள சாவ் சம்பியன்ஷிப் தொடருக்கான தயார்படுத்தல்களுக்காக கடந்த சனிக்கிழமை சவுதி அரேபியாவின் ரியாத் நகரிற்கு புறப்பட்டுச் சென்றுள்ளது. அவர்கள் நேற்று முன்தினம் அங்கு தமது பயிற்சிகளையும் ஆரம்பித்துள்ளனர். அங்கு மேற்கொள்ளும் பயிற்சிகளுக்கு மேலதிகமாக ரியாத்தில் உள்ள கழகங்களோடு இரண்டு பயிற்சிப் போட்டிகளிலும் இலங்கை அணி பங்கெடுக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இலங்கை கால்பந்தாட்ட அணி விசேட பயிற்சிகளுக்காக கட்டார் நாட்டிற்கே பயணம் மேற்கொள்ள இருந்ததெனினும், கொவிட்-19 டெல்டா வைரஸ் தொற்றினால் அதிகம் பாதிக்கப்பட்ட அபாயகரமான நாடுகளின் பட்டியலில் இலங்கை உள்ளடக்கப்பட்டிருப்பதால் கட்டாருக்குள் பிரவேசிப்பதற்கான அனுமதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டமையே பயணத் திட்டமானது ரியாத்துக்கு மாற்றப்பட்டமைக்குக் காரணம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை அணியினர் இம்மாதம் 27ஆம் திகதி தமது பயிற்சிகளை நிறைவுசெய்துகொண்டு மாலைதீவுகளுக்குப் பயணமாவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

சாவ் சம்பியன்ஷிப் போட்டிகள் அனைத்தும் இம்முறை மாலைதீவுகளின் தேசிய கால்பந்தாட்ட அரங்கில் நடைபெறவுள்ளன. கொவிட் பரவல் காரணமாக இந்தத் தொடருக்கான போட்டி அட்டவணையில் பலதடவை மாற்றம்மேற்கொள்ளப்பட்டது. தற்போதைய இறுதிப்படுத்தலின்படி, ஒக்டோபர் முதலாம் திகதி ஆரம்பமாகும் தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி பங்களாதேஷ் அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குவைத் பிரதமரை சந்தித்தார் கோட்டா

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் குவைத் பிரதமர் ஷேக் சபா அல் – ஹமேத் அல் சபா ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இரு நாடுகளுக்கிடையிலான 50 வருட நட்புறவு மற்றும் இராஜதந்திர உறவு ஆகியன தொடர்ந்தும் வலுப்படுத்தப்படும் என இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையர்கள் பலர் குவைத் நாட்டில் பணியாற்றுகின்றனர் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ள நிலையில் திறமையான தொழிலாளர்களுக்கு மேலும் சந்தர்ப்பம் வழங்குமாறும் கோரிக்கை விடுத்தார்

துறைமுக நகரம், காற்றாலை, சூரியசக்தி மின் உற்பத்தித் துறையில் நாட்டில் காணப்படும் முதலீட்டு வாய்ப்பு தொடர்பிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குவைத் பிரதமரிடம் தெளிவுபடுத்தியுள்ளார்

இதேவேளை உணவு, பாதுகாப்பு, கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணைய பாதுகாப்பு தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# பூஸா சிறைச்சாலையில் 28கைதிகளுக்குகொவிட்



பூஸா சிறைச்சாலையில் மேலும் 28 கைதிகளுக்குக் கொவிட் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

குறித்த சிறைச்சாலையில் 38 கைதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 28 கைதிகளுக்குக் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொற்றாளர்களுடன் தென் மாகாணத்தில் சிறைச்சாலை தொற்றாளர்களின் எண்ணிக்கை 1,640 ஆக உயர்வடைந்துள்ளது.

# பால் மாவின் விலை அதிகரிப்பு கொள்கையளவில் இணக்கம்

## அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவிப்பு



ஒரு கிலோகிராம் பால் மாவின் விலையை 200 ரூபா வரை அதிகரிப்பது தொடர்பில் கொள்கையளவில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய-வண்ண தெரிவித்துள்ளார்.

இருந்த போதும் பால் மாவுக்கான விலையை அதிகரிப்பதற்கு நுகர்வோர் அதிகாரசபை இதுவரை அனுமதி வழங்கவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இறக்குமதி செய்யப்படும் பால் மாவுக்கான விலையை அதிகரிப்பதற்கு இதுவரை தீர்மானிக்கப்படவில்லை.

ஒரு கிலோகிராம் பால் மாவின் விலையை 200 ரூபா வரை அதிகரிப்பது தொடர்பில் வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழுவிலேயே தீர்மானிக்கப்படும்.

உலக சந்தையில் பால் மா விலை அதிகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்து, இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலையை அதிகரிப்பதற்கு அனுமதிக்குமாறு பால் மா இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் கடந்த ஒரு மாத காலமாகக் கோரி வருகின்றன.

விலை அதிகரிக்க அனுமதிக்கப்படாதமையால் அவர்கள் தற்போது இறக்குமதியை மட்டுப்படுத்தி இருக்கின்றனர். அதனால் சந்தையில் கடந்த சில வாரங்களாக பால் மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது.

இந்த பின்னணியில் பால் மா இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது உலக சந்தையில் பால் மா விலை அதிகரிக்கப்பட்டிருப்பது, கப்பல் கட்டணம் அதிகரித்திருப்பது, ரூபாவுடன் ஒப்பிடுகையில் டொலரின் பெறுமதி அதிகரித்திருப்பது போன்ற காரணங்களுக்கமைய ஒரு கிலோகிராம் பால் மாவின் விலையை 350 ரூபா வரை அதிகரிப்பதற்கு அனுமதி கோரியுள்ளனர்.

என்றாலும் சந்தை நிலைமை மற்றும் இறக்குமதி வரி தொடர்பில் நீண்ட கலந்துரையாடலின் பின் ஒரு கிலோகிராம் பால் மாவின் விலையை 200 ரூபா வரை அதிகரிப்பது தொடர்பில் கொள்கையளவில் இணக்கப்பாடுஎட்டப்பட்டுள்ளது.

இருந்தபோதும் பால் மாவுக்கான விலை அதிகரிப்பதற்கு நுகர்வோர் அதிகாரசபை இதுவரை அனுமதி வழங்கவில்லை.

எதிர்வரும் வாரத்தில் வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழு இது தொடர்பாக கலந்துரையாடிய பின்னரே விலை அதிகரிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனாவினால் உயிரிழந்தவரை வீட்டுக்கு கொண்டுசென்று அஞ்சலி

## கிளிநொச்சியில் பரபரப்பு

கிளிநொச்சியில் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவரை, அவருடைய வீட்டிற்குக் கொண்டு சென்று மக்கள் அஞ்சலி செய்ய அனுமதித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

கிளிநொச்சி– உதயநகர் கிழக்கு பகுதியைச் சேர்ந்த முன்னாள் கிராம அலுவலர் ஒருவர், கடந்த 16ஆம் திகதி, மாவட்ட வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். இந்நிலையில், அவருடைய இறுதி நிகழ்வுகள் அவரின் வீட்டில் நடைபெறும் என்று ஒலிபெருக்கி ஊடாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

குறித்த விடயம் தொடர்பில் சமூக ஆர்வலர்களாலும் அரச உத்தியோகத்தர்களாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அதாவது, கொரோனாவால் ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்டுள்ள வீட்டில், கொரோனாவால் உயிரிழந்தவரின் சடலத்தை, மக்கள் அஞ்சலிக்காக அனுமதிக்கின்றபோது அங்கு செல்கின்ற மக்கள் ஊடாக மீண்டும் கொரோனாப் பரவல் ஏற்படும் அபாயம் உள்ளதாக அவர்கள்சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில் திங்கட்கிழமை காலை 7 மணியளவில், அவரின் சடலம் வவுனியாவிலுள்ள பூந்தோட்டம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் எனத் தெரிவிக்கப்பட்டு, எடுத்துச் செல்லப்பட்டது.

ஆனால், வாகனம் வவுனியா செல்வதற்கு பதிலாக உதயநகர் கிழக்கிலுள்ள அவருடைய வீட்டுக்குச் சென்று, வாக னம் அவர்களின் வீட்டின் உள்ளே சென்றிருக்கின்றது.

இதன்போது, அங்கு நின்றிருந்த நூற்றுக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காகத் திரண்டிருக்கின்றனர்.

குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் அங்கிருந்து புறப்பட்ட வாகனம் மீளவும் வவுனியாவிற்குச் சென்றிருக்கின்றது.

இதற்கிடையில் கொரோனாவால் உயிரிழப்பவர்களை எரியூட்டும் இடத்தில் கூட மூன்று அல்லது நான்கு பேருக்கு மட்டுமே தூரத்தில் இருந்து பார்க்க அனுமதிக்கப்படுவது நடைமுறையாகும்.

அதேபோன்று, சடலத்தை எரியூட்டுபவர்கள் கூட முழுமையாக கொரோனாப் பரவலைத் தடுக்கும் வகையிலான ஆடைகளை அணிந்துகொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருப்பர்.

ஆனால் மரணச் சடங்களில் பங்குகொண்ட மக்கள் முகக்கவசம் தவிர வேறெந்த பாதுகாப்பையும் கொண்டிருக்கவில்லை.

மேலும், குறித்த மரணச் சடங்கை வீட்டில் நடத்துவதற்கான ஏற்பாட்டில், பிரபல வைத்தியர் ஒருவரும் முன்னின்று செயற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதுடன், மரணச் சடங்கு தொடர்பான தகவலை வைத்திய அதிகாரி பணிமனையிருக்கு வழங்கியவர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு கடிந்துகொண்டமை தொடர்பிலான ஆதாரங்களும் ஊடகங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

கொரோனாத் தாக்கத்தில் இருந்து மீள்வதற்கு மக்களும் நாடும் கடும் சிரமப்பட்டுவரும் நிலையில், உயர் பதவியில் இருப்பவர்கள் இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் நடந்துகொள்கின்ற சம்பவங்கள் மக்கள் மத்தியில் மிகுந்த கவலையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊரடங்கு உத்தரவினால் தொற்றாளர் குறைவடைவு

*நேற்று (திங்கட்கிழமை) நிலைவரப்படி, தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குப் பின்னர், கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் கணிசமான குறைவு ஏற்பட்டுள்ளது.*

*அத்துடன், குறித்த காலப்பகுதியில் கொவிட் உயிரிழப்புகளின் எண்ணிக்கையிலும் 40 வீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தொற்றுநோயியல் பிரிவு வெளியிட்ட தரவுகளில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதன்படி, செப்டெம்பர் 18 ஆம் திகதியுடன் முடிவடைந்த கடந்த 28 நாள்களில் கொவிட் நோய்த்தொற்றாளர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.*

*ஓகஸ்ட் 22 ஆம் திகதி தொடக்கம் முதல் 7 நாள்களில் 1,309 கொவிட் இறப்புகள் பதிவாகியிருந்தன. ஓகஸ்ட் 29 தொடங்கி ஏழு நாள்களில் பதிவான கொவிட் இறப்புகளின் எண்ணிக்கை 1,365 ஆகும்.*

*செப்டெம்பர் ஐந்தாம் திகதி தொடங்கி ஏழு நாள்களில், 1,156 கொவிட் இறப்புகள் பதிவாகியுள்ளன. எனினும் செப்டெம்பர் 12 முதல் செப்ரெம்பர் 18 வரையிலான கடைசி வாரத்தில், கொவிட் இறப்புகளின் எண்ணிக்கை 829 ஆகும்.*

*இந்த 4 வாரங்களில் அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் இரண்டாவது வாரத்தில் பதிவாகியுள்ளன. இருப்பினும், அந்த வாரத்துடன் ஒப்பிடும்போது நான்காவது வாரத்தில் இறப்புகளின் எண்ணிக்கை சுமார் 40 வீதம் குறைந்துள்ளது. இதன்படி, ஓகஸ்ட் 20 அன்று தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஒரு மாதத்துக்குப் பிறகு இலங்கையில் ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளமை தெளிவாகிறது.*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.09.2021இல் வெளியிடப்பெற்றது.